**MCOP. No. 1883/2023** **DATE:23.10.2025**

Deposition of Witness : P.W.1

Name : Mr.**அருண் பாண்டியன்**

Father/Husband Name : Mr.**ரவி**

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Act 44 of 1969) of the 23rd day of october 2025.

---

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்து எப்பொழுது நடைபெற்றது என்றால் 09.08.2022 அன்று நடைபெற்றது. இந்த மனுவை நஷ்டஈடு கோரி எப்போழுது தாக்கல் செய்தீர்கள் என்றால் என்னுடைய வழக்கறிஞருக்கு தான் தெரியும். இந்த விபத்தை பற்றி உங்களுக்கு எப்படி தெரியவரும் என்றால் விபத்து நடைபெற்ற இடத்தில் இருந்த நபர்கள் எனக்கு தொலைபேசி மூலம் கூறினார்கள். விபத்தை நீங்கள் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். நீங்கள் தாக்கல் செய்துள்ள இறுதி அறிக்கையில் கேள்விப்பட்டுள்ள சாட்சிகள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. இறந்து போன நபரின் வயது, தொழில், வருமானம் குறித்த ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றல் சரிதான். உடற்கூறாய்வு அறிக்கையில் தலையில் காயம் ஏற்ப்பட்டுள்ளதால் தான் இறப்பு ஏற்ப்பட்டது என்றால் சரிதான். இந்த விபத்தை நேரில் பார்த்த சாட்சிகள் இல்லை என்றால் சரியல்ல. TATA ACE மோதி இந்த விபத்து ஏற்ப்படவில்லை என்றும் எந்த வாகனம் மோதி இந்தவிபத்து ஏற்ப்பட்டது என்று உங்களுக்கு தெரியாது என்றால் சரியல்ல. நீங்கள் தாக்கல் செய்துள்ள இந்த மனு காலம்கடந்து தாக்கல் செய்துள்ளதால் உங்கள் மனு நிலைநிற்க்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பொய்யாக இந்த மனுவை தாக்கல் செய்துள்ளதால் மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை–</u>** இல்லை.

x

என்னால் தட்டச்சருக்கு திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவர் சரி என ஒப்புக்கொண்ட பின்பு அவரிடம் கையொப்பம் பெறப்பட்டது.

தேதி: 23.10.2025.

**Sd/– R.Jagadeesan**
3 ஆம் நீதிபதி
சிறுவழக்குகள் நீதிமன்றம்.